பாடம் 5

# மீண்டும் ஒன்றாக

***சுகமில்லாமல் இருந்த தன் பெற்றோருக்கு உதவும்படி கைக்குழந்தையாக இருந்த தன் தம்பியைக் கவனித்துக்கொண்டான் ஜெஃப்ரி. அவனுக்குச் சாப்பாடு கொடுத்தான்; வாயைக் கழுவிவிட்டான். நீயும் உன் குடும்பத்தில் மற்றவர்களுக்கு உதவுகிறாயா? யோசேப்பு தன் குடும்பத்தினருக்கு எப்படி உதவிசெய்தார் தெரியுமா?***

பல வருடங்களுக்கு பிறகு தன் மனைவிகளோடும், 12 பிள்ளைகளோடும் யாக்கோபு கானானுக்குத் திரும்பியிருந்தார். யோசேப்பு அவருக்கு பதினோராவது மகன்; மிகவும் பிடித்தவனும்கூட. அதனால் யோசேப்பின் அண்ணன்மாருக்கு அவர்மேல் பொறாமையாக இருந்தது. எகிப்திற்குச் சென்றுகொண்டிருந்த அடிமை வியாபாரிகளிடம் யோசேப்பை விற்றார்கள்.

எகிப்தில் தனக்கு தீமை செய்யப்பட்டபோதும் தேவனுக்கு உண்மையாக இருந்தார் யோசேப்பு. கடைசியாக, எகிப்தின் ஆளுனராக யோசேப்பை



தேவன் உயர்த்தினார். பூமி முழுவதிலும் பயங்கர பஞ்சம் உண்டானது; எனவே, எகிப்திற்குச் சென்று உணவு பெற்றுவர தன் 10 மகன்களையும் யாக்கோபு அனுப்பிவைத்தார். யோசேப்புதான் அதற்கு அதிகாரியாக இருந்தார். யோசேப்பின் சகோதரர்கள் அவரை அடையாளங்காண முடியவில்லை; ஆனால், யோசேப்பு கண்டுபிடித்துவிட்டார். அவர்களை மன்னித்தார்.

குடும்பத்தோடு அவர்கள் எகிப்திற்கு வந்துவிடும்படி உணவு, பணம், வஸ்திரங்கள், கழுதைகள் போன்றவைற்றைக் கொடுத்தனுப்பினார். யோசேப்பு உயிரோடிந்ததைக் கேட்ட யாக்கோபு சந்தோஷத்தால் பூரித்தார்; அவரால் நம்பவே முடியவில்லை.

அவர்கள் எல்லாருமே எகிப்திற்குக் கிளம்பினார்கள். பயணம் முழுவதிலும் தேவனைத் துதித்துக்கொண்டே

## மனன வசனம்

**யாவருக்கும், விஷேமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்.**

**கலாத்தியர் 6:10.**

வந்தார் யாக்கோபு. யோசேப்பைப் பார்க்கவிருந்த சந்தோஷத்தால் பூரித்திருந்தார்.

‘‘உங்கள் குடும்பத்தினர் வந்துவிட்டார்கள்’’ என்று யோசேப்பிடம் அறிவித்தார்கள்.

தன் குடும்பத்தினரைப் பார்க்க அவசரஅவசரமாக யோசேப்பு சென்றார்; ஓடிப்போயய் தன் தகப்பனாகிய யாக்கோபைக் கட்டிப்பிடித்தார்; இருவருமே அழுதார்கள்.

தன் சகோதரரில் ஐந்து பேரை பார்வோனிடம் யோசேப்பு அழைத்துச் சென்றார். ‘‘உங்களுடைய தொழில் என்ன?’’ என்று பார்வோன் கேட்டார்.

‘‘நாங்கள் மேய்ப்பர் கள்’’ என்று கூறினார்கள்.

‘‘உன் சகோதரர்கள் கோசேனில் இருக்கட்டும். அதுதான் செழிப்பான பகுதி. அவர்கள் விரும்பினால் என்னுடைய மந்தைகளையும் அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும்’’ என்று யோசேப்பிடம் பார்வோன் கூறினார்.

யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபையும் பார்வோனுக்கு முன்பாக அழைத்துச் சென்றார். தேவ மனுஷனான யாக்கோபு, எகிப்தின் மாபெரும் மன்னனான பார்வோனை ஆசீர்வதித்தார்.

அதன்பிறகு, 17 வருடங்கள் எகிப்தில் தன் குடும்பத்தினரோடு யாக்கோபு உயிரோடிருந்தார்; பிறகு மரித்தார். அப்போது அவருக்கு 147 வயது.

இப்போது அப்பா மரித்துப் போனதால் யோசேப்பு தங்களை ஏதாவது செய்துவிடுவாரோ என்று அவருடைய சகோதரர்கள் பயந்தார்கள்.



# செய்தி

## என் குடும்பத்தினருக்குச் சேவைசெய்ய தேவன் எனக்கு உதவுகிறார்

"நம் அப்பா மரிப்பதற்கு முன், நாங்கள் உனக்குச் செய்த தீமைகளுக்காக எங்களை மன்னிக்கும்படி கூறினார்" என்று யோசேப்புக்கு ஒரு செய்தியனுப்பினார்கள்.

"நீங்கள் எனக்கு தீமை செய்தீர்கள். அதை தேவன் நன்மையாக முடித்தார். அதன் மூலம்தான் நான் உங்கள் எல்லாருக்கும் உதவமுடிந்தது" என்று யோசேப்பு சொன்னார்.

பிள்ளைகளே, நீங்கள் உங்கள் குடும்பத் தினருக்கு எவ்வாறு சேவைசெய்ய தேவன் விரும்புகிறார்? அரசாங்கத்தில் உங்களுக்கு வேலை இல்லாமல் இருக்கலாம். உங்கள் குடும்பத்தினருக்கு உணவுகொடுத்து உதவ வேண்டிய அவசியமும் இல்லாமல் இருக்கலாம்.

ஆனால், உங்கள் குடும்பத்தினருக்கு நீங்கள் எவ்வாறு உங்கள் அன்பைக் காட்ட முடியும்? உங்கள் சபை குடும்பத்தினருக்கு என்ன விதத்தில் நீங்கள் உதவமுடியும்?

### செய்முறை:

புதிர் 5

யோசேப்பு தன் சகோதரர்களுக்கு என்னவெல்லாம் கொடுத்தனுப்பினார். கொடுக்கப்பட்டுள்ள கோடுகளில் பெயர்களை எழுது.



___ ___ ___



___ ___ ___ ___ ___ ___ ___



___ ___ ___



___ ___ ___ ___ ___